## முக்கிய விதிமுறைகளின் சுருக்கம் - HSBC சர்வதேச சேவைகள்

| துரித தகவல்கள் | | |
|---|---|---|
| **திட்டத்தின் சிறப்பம்சங்கள்** | | **மேலதிக தகவல்களுக்கு** |
| திட்டத்தின் சிறப்பம்சங்கள் | **வெளிநாட்டுக்குக் குடிபெயர்தல்**<br>• வெளிநாட்டுக்குக் குடிபெயர்வது பற்றி நீங்கள் யோசிக்கும்போது உங்களுக்கு உதவிக்கரம் நீட்டப்படும்.<br>• குடிபெயர்ந்து வெளிநாட்டில் புலம் பெயர்ந்தவராக வசித்தல்.<br>• நீங்கள் சர்வதேச ரீதியில் சிந்திப்பவராக இருந்தால், ஏனைய சந்தைகளில் வழங்கப்படும் HSBC சர்வதேச சேவைகள் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள்..<br>**வீட்டுடன் தொடர்பை வைத்திருத்தல்**<br>• இலங்கைக்குத் திரும்பி வரும்போது அல்லது தொழிலுக்காக வேறிடத்திற்கு நகரும்போது<br>• கட்டணமற்ற சர்வதேசப் பணப் பரிமாற்றங்கள் மூலம் பணம் அனுப்புதல்.<br>**சிறந்த எதிர்காலத்திற்காக மதிநுட்பமான நகர்வுகள்**<br>• HSBCயின் உலகளாவிய வங்கிச் சேவை வலையமைப்பின் ஊடாக சர்வதேச ரீதியில் முதலீடு செய்யும்போது, உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் ஒரு பாதுகாப் வலையை உருவாக்குங்கள்.<br>**உங்கள் பிள்ளையின் எதிர்கால அபிலாசைகளுக்கு ஆதரவளியுங்கள்**<br>• உங்கள் பிள்ளைகள் தமது வெளிநாட்டுக் கல்விக்காக எங்கு செல்ல விரும்புகின்றனர் என்பதைத் தீர்மானிப்பதற்கு அல்லது அவர்களின் வெளிநாட்டுக் கல்வி பற்றி அறிவுபூர்வமான தீர்மானத்தை எடுப்பதற்குக் காலம் வரும்போது | • HSBC பிரிமியர் வ்ரவேற்புப் பொதி அல்லது HSBC அட்வான்ஸ் வ்ரவேற்புப் பொதி<br>• வங்கியின் விதிப்பனவுகள் வழிகாட்டி** |
| கணக்கின் சிறப்பம்சங்கள் | • சாவதேசக் கணக்குகள் - ஒரே கணக்கு இலக்கத்தின் கீழ் செயற்படும் இலங்கை ரூபாய் (LKR) / வெளிநாட்டு நாணய (FCY) சேமிப்புக் கணக்குகள், கால வைப்புக் கணக்குகள், உள்வரும் முதலீட்டுக் கணக்குகள் (IIA) என்பன உள்ளடங்கும்.<br>• HSBC பிரிமியர் அல்லது HSBC அட்வான்ஸ் மற்றும் நீங்கல் HSBCஇல் வைத்திருக்கும் ஏனைய கணக்குகளில் உங்கள் சகல நிதி அலுவல்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைக்கப்பட்ட விபரக்கூற்று.<br>• வர்த்தகச் சின்னம் பொறிக்கப்பட்ட HSBC பிரிமியர் மற்றும் HSBC அட்வான்ஸ் டெபிற் கார்ட்கள்.<br>• HSBCயின் ஒன்லைன் வங்கிச் சேவையை அணுகும் வசதி.<br>• SMS விழிப்பூட்டல்கள் | |
| அனுகூலங்கள் | **வெளிநாட்டுக் கணக்கு ஆரம்பம்**<br>• நீங்கள் செல்லவிருக்கும் நாட்டில் எமது செயற்பாடுகள் இருக்கும் பட்சத்தில், நீங்கள் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்பே அந்த நாட்டில் உங்கள் கணக்கை ஆரம்பிக்க முடியும். | |

| | | |
|---|---|---|
| | **குளோபல் வியூ மற்றும் உலகளாவிய பரிமாற்றம்**<br>• உலகளாவிய ரீதியில் கணக்குகளைப் பவையிடலாம். உலகெங்கிலும் உங்கள் HSBC பிரிமியர் கணக்குகளுக்கிடையே கட்டணமின்றி உடனுக்குடன் பணத்தைப் பரிமாற்ற முடியும்.<br>**உங்கள் கடன் வரலாற்றைப் பரிமாறுங்கள்**<br>• உங்கள் கடனை நீங்கள் செல்வ்விருக்கும் நாட்டில் / பிராந்தியத்தில் முன்கூட்டியே ஸ்தாபியுங்கள்.<br>**ஒன்றில் பிரிமியர், அனைத்திலும் பிரிமியர்**<br>நீங்கள் ஒரு பிரிமியர் வாடிக்கையாளராக இருந்தால், நீங்கள் செல்லும் நாட்டிலும் / பிராந்தியத்திலும் பிரிமியர் அந்தஸ்தை அனுபவிப்பீர்கள். | |
| தேவையான ஆவணங்கள் | **வெளிநாட்டுக்குக் குடிபெயர்தல்**<br>• ஆளடையாளச் சான்று (உதா. கடவுச்சீட்டு)<br>• முகவரிக்கான சான்று<br>• வருமானத்திற்கான சான்று ஆவணங்கள்<br>• சாவதேசக் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கான தகுதியை நிரூபிக்கும் ஆவணங்கள் (நிரந்தர வசிப்பிட வீசா, தொழில் அனுமதிப்பத்திரம், மாணவர் வீசா, இரட்டைப் பிராஜாவுரிமைச் சான்றிதழ் முதலியன)<br>• தகுதி, அந்தஸ்து, செல்லும் நாட்டின் உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கேற்ப வேறு 2 மேலதிக ஆவணங்கள் தேவைப்படும்.<br><br>**இலங்கைக்குப் பணம் அனுப்புதல்**<br>• ஆளடையாளச் சான்று (உதா. கடவுச்சீட்டு)<br>• முகவருக்கான சான்று<br>• வருமானத்திற்கான சான்று ஆவணங்கள்<br>• தகுதி, அந்தஸ்து, செல்லும் நாட்டின் உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கேற்ப வேறு 2 மேலதிக ஆவணங்கள் தேவைப்படும். | சர்வதேச வங்கிச் சேவை நிலையத்டன் தொடர்பு கொள்ளுங்கள் ** |
| தகுதி நிபந்தனைகள் | தகுதிபெறுவதற்கு, நீங்கள் பின்வரும் ஒன்றின் வாடிக்கையாளராக இருக்க 2 வேண்டும்<br>**HSBC பிரிமியர்**<br>• இ.ரூ.10 மில்லியன் என்ற மொத்த உறவு மீதியைப் பேணுங்கள்.<br>• பிரிமியருக்கான மொத்த உறவு மீதியை நடைமுறை / சேமிப்பு / கால வைப்பு கணக்கொன்றில் பேண முடியும். இந்த மீதியை ரூபாயில் அல்லது ரூபாய்க்குச் சம்மான வெ ளிநாட்டு நாணயத்தில் அல்லது இரண்டும் கலந்த முறையில்பேணலாம்.<br>அல்லது<br>**HSBC அட்வான்ஸ்**<br>• இ.ரூ.1 மில்லியன் என்ற மொத்த உறவு மீதியைப் பேணுங்கள். அல்லது,<br>• இ.ரூ.150,000 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்தச் சம்பளத்தை வைப்பிலிடுங்கள்<br>• அட்வான்ஸுக்கான மொத்த உறவு மீதியை நடைமுறை / சேமிப்பு / கால வைப்பு கணக்கொன்றில் பேண முடியும். இந்த மீதியை ரூபாயில் அல்லது ரூபாய்க்குச் சம்மான வெ ளிநாட்டு நாணயத்தில் அல்லது இரண்டும் கலந்த முறையில் பேணலாம். | • HSBC பிரிமியர் வ்ரவேற்புப் பொதி அல்லது HSBC அட்வான்ஸ் வ்ரவேற்புப் பொதி<br>• வங்கியின் விதிப்பனவுகள் வழிகாட்டி ** |

| நிதி அறவீடுகள் | | மேலதிக தகவல்களுக்கு |
|---|---|---|
| சேவைக் கட்டணம் | • இலங்கையின் சர்வதேச வங்கிச் சேவை நிலையத்தின் (IBC):ஊடாக சர்வதேச கணக்கை ஆரம்பிப்பதற்கான சேவைக் கட்டணம்:<br>- பிரிமியர் வாடிக்கையாளாகள் - இலவசம்<br>- பிரிமியர் அல்லாத வாடிக்கையாளாகள் - கட்டணம் அறவிடப்படும் | • சர்வதேச வங்கிச் சேவை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் **<br>• HSBC வலைத்தளம் **<br>• வங்கி விதிப்பனவுகள் வழிகாட்டி ** |
| ATM பண மீளப்பெறுதல் கட்டணம் | • HSBC பிரிமியர் ATM கார்ட்டை பயன்படுத்தி HSBC குழும ATM வலைமைப்பில்[2] மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு பண மீளப்பெறுதலுக்கும் கொடுக்கல் வாங்கல் கட்டணம் தள்ளுபடி[1]<br>• HSBC பிரிமியர் மற்றும் HSBC அட்வான்ஸ் திட்டங்களுக்கான நிபந்தனைகளுக்கு உட்படும். | |
| ஏனைய கட்டணங்கள் | • உலகளாவிய பரிமாற்றக் கட்டணம், அவசர பணமாக்கல் சேவைக் கட்டணம் என்பன தள்ளுபடி செய்யப்படும்.<br>• தெரிவு செய்யப்பட்ட வங்கிச் சேவைகள் பலவற்றிற்கு கட்டணத் தள்ளுபடிகள் அல்லது முன்னுரிமைச் சலுகைகள் வழங்கப்படும். கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் பற்றிய விபரங்களுக்கு, HSBCயின் சிற்றளவு வங்கிச் சேவைகள் மற்றும் செல்வ முகாமைத்துவ வாடிக்கையாளருக்கான “வங்கிச் சேவை விதிப்பனவுகள் வழிகாட்டியை” பார்க்கவும். இது HSBC பிரிமியர் வலைத்தளத்திலும் எந்தவொரு HSBC கிளையிலும் கிடைக்கும். | |

முக்கிய விதிமுறைகளின் சுருக்கம் - HSBC சர்வதேச சேவைகள்

| துரித தகவல்கள் | | |
|---|---|---|
| முக்கிய விதிமுறைகள் | | மேலதிக தகவல்களுக்கு |
| **HSBC பிரிமியருக்கான தகுதிகள்** | • HSBC பிரிமியா சிறப்பம்சங்கள் மற்றும் அனுகூலங்களை அனுபவிப்பதற்கு, HSBC பிரிமியருக்கான தகுதி நிபந்தனைகளையும் ஏற்புடைய ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் நீங்கள் பூர்த்திசெய்ய வேண்டும். | விதிகள் மற்றும் நிபந்தனைகள் ** <br><br> தனித்தனி திட்டத் தகவல் தாள்கள் |
| **HSBC அட்வான்ஸுக்கான தகுதிகள்** | • HSBC அட்வான்ஸ் சிறப்பம்சங்கள் மற்றும் அனுகூலங்களை அனுபவிப்பதற்கு, HSBC அட்வான்ஸுக்கான தகுதி நிபந்தனைகளையும் ஏற்புடைய ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் நீங்கள் பூர்த்திசெய்ய வேண்டும் | |
| **கூட்டுக் கணக்குகள்** | • கூட்டுக் கணக்கு வைப்பாளாகள் என்ற முறையில், நீங்கள் ஏற்புடைய கணக்கு மற்றும் சேவைகள் தொடாபில் அல்லது 4 வேறு வித்த்தில் தனித்தனித் திட்டத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பேற்க வேண்டும். | |
| **அறவீடுகள்** | • சேவைக் கட்டணங்கள், வசதிக் கட்டணங்கள் அல்லது வேறேதும் அறவீடுகள் காலத்திற்க் காலம் ஏற்புடைய சந்தர்ப்பங்களில் விதிக்கப்படும். கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் விபரங்கள் , HSBCயின் சிற்றளவு வங்கிச் சேவைகள் மற்றும் செல்வ முகாமைத்துவ வாடிக்கையாளருக்கான "வங்கிச் சேவை விதிப்பனவுகள் வழிகாட்டியில்" பிரசுரிக்கப்பட்டுள்ளன. அதனை HSBC பிரிமியர் வலைத்தளத்திலும் எந்தவொரு HSBC கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். | |
| **உங்கள் தகவல்களின் உபயோகம்** | • HSBC மற்றும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்துவ நிறுவனங்கள் வாடிக்கையாளர்களின் தகவல்களை (வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்கள், அதிகமாக நாடப்படும் நுகர்வு (FMC) திட்டங்கள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளாகளினால் பயன்படுத்தப்படுதல் மற்றும் HSBC குழுமத்துடன் வாடிக்கையாளர் கொண்டுள்ள உறவுகள் தொடர்பான தகவல்கள் இதில் உட்படும்) சேகரிக்க, பயன்படுத்த மற்றும் பகிர்ந்துகொள்ள முடியும். வாடிக்கையாளர் தகவல்கள் வாடிக்கையாளிடம் (அல்லது வாடிக்கையாளரின் சார்பில் செயற்படும் ஒருவரிடம்) இருந்து கோரப்படவும் முடியும். வேறு மூலாதாரங்களினால் உருவாக்கப்பட்ட அல்லது HSBC அல்லது HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்துவ நிறுவனங்க்க் கிடைக்கின்ற ஏனைய தகவல்களுடன் இணைக்கப்பட்ட தகவல்கள் HSBC இனால் அல்லது HSBC யின் சார்பில் அல்லது HSBC குழும அங்கத்தவாகளினால் 4 சேகரிக்கப்படவும் முடியும். | |
| **உங்கள் கணக்குகளில் பற்று வைக்கவும் எதீரீடு செய்யவும் எமக்குள்ள உரிமை** | உங்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்காமல் பின்வருவனவற்றைச் செய்ய எமக்கு உரிமையுண்டு:<br>• உங்களால் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் தொகையை நீங்கள் எம்முடன் பேணிவரும் ஏதேனும் கணக்கில் பற்று வைத்தல்;<br>• நீங்கள் எம்முடன் பேணிவரும் ஏதேனும் அல்லது சகல கணக்குகளையும் இடைநிறுத்திவைத்தல், அத்தைகைய கணக்குகளிலுள்ள மீதியை ஒன்றுசேர்த்து அல்லது ஒருங்கிணைத்து அத்தகைய ஏதேனும் கணக்கில் வரவாகவுள்ள ஏதேனும் பணத் தொகையை, நீங்கள் (தனியாக அல்லது 4 வேறு எவருடனாவது சேர்ந்து கூட்டாக) தற்சமயம் அல்லது எதிர்காலத்தில் எமக்குச் | |

| | | |
|---|---|---|
| | செலுத்த வேண்டிய உண்மையான அல்லது எதேச்சையான ஏதேனும் தொகையைத் தீர்ப்பதற்காக எதிரீடு செய்தல் அல்லது பரிமாற்றுதல்; மற்றும்<br>• நீங்கள் எம்முடன் பேணிவரும் ஏதேனும் அல்லது சகல கணக்குகளிலும் ஏதேனும் நாணயத்தில் உங்களுக்கு வரவாகவுள்ள ஏதேனும் பணத் தொகை உங்களுக்கு வருமதியாகுமபோது அல்லது உங்களால் கோரப்படும்போது. அத்தகைய தொகை நீங்கள் எமக்குச் செலுத்த வேண்டிய தொகையைவிட இருக்கும் அளவுக்கு அத்தகைய பணத்தை உங்களுக்குச் செலுத்த மறுத்தல். | |
| **சேவைகளின் அல்லது கணக்குகளின் முடிவுறுத்தல்** | • எமக்கு எழுத்துமூல முன்னறிவித்தல் கொடுப்பதன் மூலம் நீங்கள் எமது சேவைகளை அல்லது உங்கள் கணக்குகளில் எதையேனும் முடிவுறுத்த முடியும்.<br>• உங்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்காமல் எமது சேவைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் ஏதேனுமொரு பகுதியை முடிவுறுத்தவும், விதிகள் மற்றும் நிபந்தனைகளில் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், உங்களுக்கான முன்னறிவித்தலுடன், காரணத்தைத் தெரிவித்தோ தெரிவிக்காமலோ உங்கள் கணக்குகளில் எதையேனும் நாம் முடிவுறுத்த முடியும். | |
| **விதிகள் மற்றும் நிபந்தனைகளின் மாறுபாடுகள்** | • எமது கட்ட்டங்களில் காட்சிக்கு வைக்கப்படும் விளம்பரங்கள், யின் பொது வலைத்தளம் அல்லது நாம்பொருத்தமெனக் கருதும் வேறேதும் முறையில் உங்களுக்கு அறிவிப்பதன் மூலம் காலத்திற்குக் காலம் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற நாம் உரிமை கொண்டுள்ளோம். | |

**அடிக்குறிப்புகள்:**

1. வெளிநாடகளிலுள்ள உள்ளூர் வங்கிகளின் மேலதிக அறவீடுகள் விதிக்கப்படலாம் (ஏற்புடையதாயின்) The UnionPay ATM chip card மூலம் ஆர்ஜன்டீனா, பிறேஸில், பிரான்ஸ். கிரேக்கம், மோல்டா, மெக்ஸிகோ, நியூசிலாந்து, துருக்கி ஆகிய நாடுகளிலுள்ள HSBC ATMகள் தவிர, உலகிலுள்ள ஏனைய சகல HSBC ATMகளையும் அணுக முடியும்.

## உங்கள் குரல்

நீங்கள் உங்களுடைய கருத்துக்களை எமக்குத் தெரிவிக்க விரும்பினால், தயவுசெய்து எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

தபால் முகவரி - வாடிக்கையாளர் சேவைகள் முகாமையாளர், சிற்றளவு விநியோகம் மற்றும் செல்வ முகாமைத்துவம், HSBC நிலையம், இல. 163, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
வாடிக்கையாளர் தீர்வுகள் ஹொடலைன் +94 114 511 566
மின்னஞ்சல் : customersolutions@hsbc.com.lk
வலைத்தளம் : www.hsbc.lk

நீங்கள் முன்வைக்கும் ஏதேனும் முறைப்பாடுளை உங்களுக்குப் பூரண திருப்பி அளிக்கும் முறையில் தீர்த்துவைக்கவே நாம் எப்போதும் விரும்புகின்றோம். அதே சமயத்தில், நீங்கள் நிதி ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடாபுகொண்டு பரிகாரத்தைக் கோரவும் முடியும். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள்;

தபால் முகவரி - நிதி ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம், இலங்கை, இல. 143A, வஜிரா வீதி, கொழும்பு 04.
தொலைபேசி: +94 112 595 625
ஃபெக்ஸ் : +94 112 595 624
மின்னஞ்சல்: infor@financialombudsman.lk
வலைத்தளம்: www.financialombudsman.lk
மேலதிக தகவல்களுக்கு, தயவுசெய்து www.hsbc.lk என்ற எமது வலைத்தளத்தில் பிரவேசியுங்கள்.

*ஒருங்கிணைக்கப்பட்ட கணக்கிற்கு, பூரணமாக ஒருங்கிணைக்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும். இந்த அட்டவணை, முக்கிய திட்ட விதிமுறைகளின் சுருக்கத்தைக் கொண்டுள்ளது. இது விளக்கத்திற்காக மாத்திரமே தரப்பட்டுள்ளது. இது பூரணமான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குப் பதிலீடானது அல்ல. ஏதேனும் முரண்பாடு காணப்படின், பூரணமான விதிகள் மற்றும் நிபந்தனைகளே சரியானதாக ஆதிக்கம் செலுத்தும்.

| ** மேலதிக தகவல்களுக்கு | |
|---|---|
| வங்கியின் விதிப்பனவுகள் வழிகாட்டி | விதிப்பனவுகள் \| வட்டி மற்றும் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை வீதங்கள் - HSBC LK |
| திட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் | விதிகள் மற்றும் நிபந்தனைகள் \| உதவி மற்றும் ஆதரவு நிலையம் - HSBC LK |
| சர்வதேச வங்கிச் சேவை நிலையம் | மின்னஞ்சல் : www.internationalbanking@hsbc.com.lk \| www.internationalservices@hsbc.com.lk<br>தொ : +94 11 464 1888 (வார நாட்களில் மு.ப. 9 முதல் பி.ப. 5 வரை)<br>வலைத்தளம் : www.hsbc.lk/international |
| HSBC வலைத்தளம் | www.hsbc.lk |